வடக்கு.மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல.04/2019 (01)

எனது இல.**NP/07/10/01/123**
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்,
யாழ்ப்பாணம்.
**10.05.2019**

செயலாளர், நிதி, திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சிஅமைச்சு,
ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம்,
பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர், பி.உ.உ.ஆ.அலுவலகங்கள்,
ஆணையாளர்-மாநகர சபை, செயலாளர்கள் - நகரசபைகள், பிரதேசசபைகள்
வடக்கு மாகாணம்.

## வடக்கு மாகாண பொதுச் சேவையின் வருமானப் பரிசோதகர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை -2019

*மேற்படி விடயம் தொடர்பாக எமது சமஇலக்க 18.03.2019ம் திகதிய சுற்றறிக்கை 04/2019ன் மீது தங்களின் கவனம் கோரப்படுகின்றது.*

*01.* *பந்தி 03.4 ஆனது பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது.* **கல்விப் பொதுத் தராதர (சா.த) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன், மொழி (தமிழ் /சிங்களம் /ஆங்கிலம்), கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தலுடன் வேண்டும்.**

*02.* *பந்தி 03.5 ஆனது பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது.* **2019.05.28ஆம்** *திகதிக்கு உடன் முன்வரும் ஐந்து (05) வருடகாலப் பகுதியில் தொடர்ச்சியாகவும், திருப்திகரமாகவும் சேவையாற்றியுள்ளவராக இருக்கவேண்டுமென்பதுடன் அதுபற்றி திணைக்களத் தலைவர் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.*

*03.* *மேலும் குறித்த சுற்றறிக்கையின் விண்ணப்ப முடிவுத்திகதியானது 28.05.2019 வரை நீடிக்கப்பட்டுள்ளது.*

*04.* *அத்துடன் குறித்த பரீட்சையானது* ***2019ம் ஆண்டு ஆனி அல்லது ஆடி*** *மாதம் நடாத்தப்படும் என்பதுடன் சுற்றறிக்கையின் ஏனைய விடயங்கள் மாற்றமின்றிக் காணப்படும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.*

எனவே தங்கள் அமைச்சு, திணைக்களங்களின் கீழ்க்கடமையாற்றுகின்ற தகைமையுடைய விண்ணப்பதாரிகளுக்கு தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன் உரிய விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னதாக விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

**அ.சிவபாலசுந்தரன்,**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
*10.05.2019*

பிரதிகள் :-

1. பிரதம செயலாளர், பிரதம செயலாளர் செயலகம். - வடமாகாணம் - தகவலுக்காக
2. ஆளுநரின் செயலாளர், ஆளுநர் செயலகம். - வடமாகாணம் - தகவலுக்காக